மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.29/2018

2025ம் ஆண்டு அக்டோபர் 06ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

6.10.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் ஊதியூரில் வசித்து வருகிறேன். எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியம் ஆகியவற்றை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில் எனது முகவரியாக ஈரோடு மாவட்டம், அந்தியூர், தேர் வீதியில் தேநீர் கடை நடத்தி வரும் காலம் சென்ற தங்கமணி மகன் ரமேஷ் குமார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் எனது வழக்குரையில் காங்கேயம் வட்டம், காங்கேயம் நகரம், திருவள்ளுவர் தெரு கதவு எண்.67 என்ற முகவரியில் வசிக்கும் காலம் சென்ற தங்கமணி மகன் என்று சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அது வாடகை வீட்டு முகவரி. நான் ஊதியூரில் குடியிருந்து

வரவில்லை என்றும், காங்கேயத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரிதான். வழக்கு சொத்தில் 2015 ஆம் ஆண்டு வரை பிரதிவாதிகளான ஜெய கண்ணன், ராஜாத்தி ஆகியோர்கள் ஹோட்டல் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் முழுவதும் கட்டிடங்கள் உள்ளது என்றால் ஆமாம் பிரதிவாதிகள் இருவரும் 2008 ஆம் ஆண்டு தாவா சொத்திற்கு கிழபுறமும் மற்றும் தென்புறமும் உள்ள பூமிகளை கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான் கிரயம் பெற்ற இடத்தில் பிரதிவாதிகள் இருவரும் கடந்த 19.05.2010 ல் ஊராட்சியில் முறையாக அனுமதி பெற்று அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழபுறம் உள்ள கட்டிடத்தில் பிரதிவாதிகள் ஹோட்டல் நடத்தி வருகிறார் என்றால் ஆமாம். 2016 ஆம் ஆண்டிலிருந்து பிரதிவாதிகள் ஹோட்டல் நடத்தி வருகிறார் என்றால் ஆமாம் 2016 ஆம் ஆண்டு தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். 1ம் வாதி எப்போது இறந்தார் என்றால் 4 ஆண்டுகள் இருக்கும்.

4. இந்த வழக்கு தாக்கல் செய்து 4 நாட்களில் 06.02.2018 தேதியில் நானும், மற்ற வாதிகளும் சேர்ந்து தாவா சொத்தை ஒரு தண்டபாணி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டோம் என்றால் சரிதான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நாங்கள் தண்டபாணி என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. தண்டபாணி கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு தாவா சொத்தில் இருந்த மேற்கூறையை எடுத்து சென்று விட்டார் என்றால் அவர் கிரயம் வாங்கிய சொத்தில் இருந்ததை எடுத்துச் சென்றார்.

5. தாவா சொத்தில் தற்போது சுவர் மட்டும் தான் உள்ளது. ஓடுகள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். தண்டபாணிக்கு கிரயம் கொடுத்ததற்கு பின்னிட்டு தாவா சொத்தை யார் அனுபவம் செய்து வருகிறார் என்றால் தண்டபாணி தான் அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்த விபரத்தை ஏன் 7-1/2 ஆண்டுகளாக நான் நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் இருந்து வருகிறோம் என்றால் காரணம் எதுவும் இல்லை மேற்படி கிரயம் விபரம் சம்பந்தமாக நான் தற்போது தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. தற்போது தாவா சொத்தை பொறுத்து எனக்கோ எனது குடும்பத்திற்கோ எந்த ஒரு பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புல எண்.875/60 மட்டும் தான் தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு புல எண்.875/61 மற்றும் புல எண்.875/63 ஆகியவை பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் பச்சை வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதிகள் தான் தாவா சொத்துக்கள் என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். சர்வேயர் வரைபடத்தில் புல எண்.875/61ல் 269 சதுர அடிகள் பச்சை வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

7. அந்த 269 சதுர அடிகள் நிலமானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமி என்று சொன்னால் சரியல்ல. ஆணையர் வரைபடத்தில் கத்தரிப்பூ வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள 258 சதுர அடி நிலத்தில் கட்டிடங்கள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். புல எண்.875/61 இல் உள்ள 279 சதுர அடிகள் நிலத்திற்கு பதிலாக புல

எண் 875/60ல் உள்ள 258 சதுர அடி நிலத்தை எனது தகப்பனார் காலத்திலேயே எனது சித்தப்பாவும் எனது அப்பாவும் மாற்றிக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த ஒரு பகுதியையும் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களிடம் தாவா சொத்தை கிரயம் பெற்ற தண்டபாணி என்பவரை நாங்கள் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

8. தாவா சொத்தில் எங்களுக்கோ எங்கள் குடும்பத்தினருக்கோ எவ்வித அனுபவமும் பாத்தியமும் இல்லாத நிலையில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், தொடர் பரிகாரமாக செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரமும் கோர எங்களுக்கு எவ்வித அருகதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.06 18:37:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்